# தமிழ் மொழியும் இலக்கியமும்.

## செயலட்டை – 1

தரம்- 10 **பகுதி-1** நேரம்-1 மணி

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. **<u>பின்வரும் வினாக்களுக்குப் மிகப் பொருத்தமான விடையை தெரிவுசெய்து கோடிடுக.</u>**

1) "நித்திலப் புன்னகை சுடர் வீசிடப்" இப்பாடலடியில் இடம்பெற்றுள்ள நித்திலம் என்பதன் பொருள்.

1) தங்கம் 2) பூமி 3)முத்து 4) நிலம்

2) "கேண்மை தழி இக் கொளல்வேண்டும் " என்பதில் கேண்மை என்பதன் எதிர்ப்பதம்.

1) முரண் 2) நட்பு 3) வேறுபாடு 4) பகை

3) " வழியும் பொதியை வரையினிற் கால்கொண்டு " என்பதில் வரை என்பதன் பொருள்.

1) மலை 2) நிலம் 3) இடம் 4 )வரையறை

4) "கொங்கர்க் கமரர் பதியளித்த கோவே" . இப்பாடலில் அமரர் என்பதன் எதிர்ப்பதம்.

1) தேவர் 2) நரகர் 3) தெய்வம் 4) அரசர்

5) "அந்தப்புரங்களில் ஆடிக்கொண்டிருந்த கவிதையை அவன்தான் சமூகத்தின் சேவகியாக்கினான்". இவ்வாக்கியத்தில் சேவகி என்பதன் எதிர்ப்பால்.

1) ஐயன் 2) தேவன் 3) சேவகர் 4) சேவகன்

6) பின்வரும் சொற்களில் ககரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்.

1) சிங்கம் 2) மங்கை 3)முகம் 4) தங்கம்.

7) பாலன் நன்றாகப் படித்தான். பாடசாலை நீண்டநாள் மூடப்பட்டது .

மேற்கூறிய வாக்கியங்களை இணைப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருத்தமான இணைப்பிடைச் சொல்.

1) ஆனால்  2) ஆனாலும்  3) ஆகவே  4) ஆதலால்.

8) ஆமணக்கின் வித்து முத்து எனப்படுவது போல சோளத்தின் வித்து.

1) மணி  2)விதை  3) பருப்பு  4) அரிசி.

9) விடாப்பிடியாய் இருத்தல் என்னும் பொருள்தரும் மரபுத்தொடர்.

1) கங்கணம் கட்டுதல்

2) பொடி வைத்துப் பேசுதல்.

3) ஒற்றைக் காலில் நிற்றல்.

4) ல்லுக் கட்டுதல்

10) கட்டுரையில் தவிர்க்கப்பட வேண்டியது.

1) சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறுதல்.

2) ப ந்திகளை ஒழுங்குற அமைத்தல்.

3) விடயங்களை மீண்டும் மீண்டும் கூறுதல்.

4) மையக் கருத்தை வலியுறுத்தி பந்தியின் தொடர்ச்சி அமைந்திருத்தல்.

( 10 X 2= 20 புள்ளிகள்)

# பகுதி- 2

புலங்க ளோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவன் அங்கவை
நண்ணு றப்பெறல் திண்ணம தாமென
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துளேன்
விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே.

1) ஒருவர் தாம் விரும்பும் நலன்களை எவ்வாறு அடையலாம் என்பதை பாரதியார் கூறுகிறார்?
2) ஐம்புலன்களும் எவை?
3) அந்தக் கரணங்களும் எவை?
4) "விலங்கியற்கை" எனும் சொல்லின் கருத்தை எழுதுக.
5) பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
   1) திண்ணம்-
   2) இலங்கும்-
   3) நண்ணுறல்-

(5X3=15 புள்ளிகள்)

4) கொரோனா என்ற ஆட்கொல்லி நோய் தீவிரமாக பரவி வருவதால் அதனைக் கட்டுப்படுத்த பாடசாலையின் உட்புற வெளிப்புறச் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் என்ற வகையில் உமது பிரதேச செயலாளருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

(15 புள்ளிகள்)

-----------------------------------------------.